யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை

# பரிசில் தினம்

# 2017

## அதிபர் அறிக்கை

யா/ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை

பரிசளிப்பு விழா – 2017

காலம் : 28.10.2017 (சனிக்கிழமை)
இடம் : பாடசாலை மண்டபம்
நேரம் : மு.ப 8.30 மணி

**தலைவர்**

திருமதி. ந. சந்திரகுமார் (அதிபர்)

பிரதம விருந்தினர்

***திரு. ச. சிவானந்தராஜா***

(கோட்டக்கல்வி அதிகாரி - சண்டிலிப்பாய்)

**சிறப்பு விருந்தினர்**

***அருட்திரு.றோய் பேடினன்ட்***

(அடைக்கலநாயகி ஆலய பங்குத்தந்தை, ஆனைக்கோட்டை)

**கௌரவ விருந்தினர்கள்**

***திரு திருமதி பாஸ்கரன்***

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பாடசாலைச் சமூகம்

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினரை அழைத்து வருதல்
- கொடி ஏற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புரை
- ஆசியுரை (அருட்திரு.ரோய் பேடினண்ட்)
- அதிபர் அறிக்கை
- பரிசில் வழங்கல்
- கௌரவிப்பு நிகழ்வு
- கௌரவ விருந்தினர் உரை ( திருமதி த.பாஸ்கரன்)
- பிரதம விருந்தினர் உரை (திரு. ச.சிவானந்தராஜா D.E.O)
- நன்றியுரை (உதவி அதிபர் திருமதி க. சுரேஸ்)
- கலைநிகழ்வுகள்
- பாடசாலைக் கீதம்

# அதிபர் அறிக்கை

இங்கிதமான இனிய காலை வேளையிலே, தொண்ணூறாண்டு காலக் கல்விச் சேவையால் முதிர்ந்து வெற்றிச் சாதனைகளோடு நிமிர்ந்து நிற்கின்ற பாடசாலை அன்னையின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றேன். அரங்கோடு மண்டபத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் பெருந்தகைகளே, நிகழ்வின் பிரதம விருந்தினர் அவர்களே, சிறப்பு விருந்தினர் அவர்களே, கௌரவ விருந்தினர்களே, விழாவை சிறப்பிக்க வந்திருக்கும் அதிபர்களே, ஆசிரியர்களே, எங்கள் பாடசாலையின் ஊட்டமாய் திகழுகின்ற அன்பான பெற்றோர்களே, பழையமாணவர் செல்வங்களே, அன்னையின் வளர்ச்சியில் அதீத அக்கறை செலுத்திவரும் நலன்விரும்பிகளே, பாசமிகு மாணவ முத்துக்களே முதலில் உங்கள் அனைவருக்கும் இனிதான வந்தனங்களைத் தெரிவித்து எனது அகமமர்ந்து உங்களை இருகரங்குவித்து வரவேற்று இவ்வாண்டின் அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய பரிசில் தின விழாவிற்கு எம்மைப் பெருமைப்படுத்தி நிகழ்வைச் சிறப்பிக்க முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டக் கல்வி அலுவலர் திரு ச. சிவானந்தராஜா அவர்கள் இன்றைய எமது பெருவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது எமக்கு மகிழ்வையும் ஊக்கத்தையும் தருகின்றது. சண்டிலிப்பாய் கோட்ட பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த கரிசனை உடையவர். அனுபவம் சார்ந்த தன்னுடைய வழிகாட்டலினால் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தை சிறப்பான ஆளுமையோடு வழிநடாத்தி வருபவர். குறிப்பாக எமது பாடசாலையின் வளர்ச்சியில் அதீத அக்கறையோடு செயற்பட்டுவருவதோடு தேவையான போதெல்லாம் ஆலோசனைகளை எமக்கு வழங்கி எமது பாடசாலையின் துரித வளர்ச்சிக்காக பாடுபடுபவர்களில் முதன்மை நிலை பெறுகின்ற ஒருவராக நாம் அவரை இனங்காண்கின்றோம். அவருடைய காலத்திலேயே சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் எமது பாடசாலையும் சிறந்தவொரு பாடசாலையாக இயங்கிக் கொண்டு இருப்பதையிட்டு பெருமை கொள்வதோடு அவர் பணி சிறக்க

இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து அவர்களை அன்புடன் வரவேற்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எங்கள் அடைக்கலநாயகி ஆலய பங்குத்தந்தையான அருட்திரு ரோய் பேடினன்ட் அடிகளார் எம்மோடு அருகிலிருந்து எங்கள் பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் உன்னிப்பாக அக்கறையோடு அவதானித்து வருவது மட்டுமல்லாமல் எம்முடனும் சில ஆலோசனைகளை வழங்கி வருவதோடு. எமது எந்தவிழாவிற்கும் எம்மோடு ஒன்றித்து எமக்கு ஆசிகள் வழங்கி வருவதையிட்டு பெருமையடைகின்றோம். அந்தவகையில் இன்றும் எமது விழாவிற்கு ஆசியுரை வழங்கி சிறப்பிக்க வந்திருக்கும் தங்களையும் இன்முகத்தோடு வரவேற்கின்றேன்.

அத்துடன் கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியை தயாநிதி பாஸ்கரன் அவர்தம் துணைவர் திரு பாஸ்கரன் அவர்களே, எங்கள் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் தங்களை அன்புடன் வருக வருக என வரவேற்றுக் கொள்கின்றோம். மேலும் எம்முடன் இணைந்து எமது ஆரம்பக்கல்வி மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் அர்ப்பணிப்போடு அரும்பணியாற்றி மாணவர்களை வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்ற தங்களின் உன்னத சேவையை நினைவு கூர்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன். மேலும் சென்ற வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 93% மாணவர்களை சித்தி எய்த வைத்து மனமகிழ்வோடு சேவையை நிறைவு செய்ய கிடைத்தமையை இட்டு பெருமையடைகின்றோம். தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் நலமாக நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

மற்றும் எமது விழாவினை சிறப்பிக்க எங்கள் அழைப்பை ஏற்று வருகை தந்துள்ள பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, பெரியோர்களே உங்கள் அனைவரையும் எமது ஆசிரியர், மாணவர்களுடன் இணைந்து வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

## மாணவர் உயர்விற்கு உன்னதமாக உழைக்கும் ஆசிரியர் குழாம்.

என் அன்பான ஆசிரியர்களே! மாணவர் உயர்விற்கு உன்னதமான உயரிய சேவையை ஆற்றிக் கொண்டிருக்கும் தாங்கள் அனைவரும் என்னுடன் இணைந்து அர்ப்பணிப்போடு அயராது உழைத்து தம் கைகளில் தவழும் மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்த்தெடுத்து கல்வி புலத்திலும் மிளிரச் செய்வதோடு எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக திகழவும், சமூக நல்லொழுக்க விழுமியங்களுடனும் வாழ்வதற்கு தேவைப்படும் சிந்தனை துளிகளை மாணவர்களுக்கு விதைத்து மாணவர் உள்ளத்தில் தடம் பதிக்கும் நல் ஆசானாக விளங்கி எமது பாடசாலையின் கட்டுப்பாடுகளையும் பேணி, தங்களின் உழைப்பினால் உயர்வீர்களாக! என வாழ்த்துவதோடு தாங்கள் ஆற்றும் பணி கருதி அனைவரையும் பாராட்டி நிற்கின்றேன்.

### 2016ஆம் ஆண்டு கற்பித்த நிரந்தர ஆசிரியர்கள்

ஆண் ஆசிரியர்கள் - 7

பெண் ஆசிரியர்கள் - 21

### இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

| | |
|---|---|
| திரு நா.ஜெயராஜ | திரு இ.ஜதீஸ்மன் (கணிதம்) (NCOE) |
| திரு வ. நிகேதன் | செல்வி ஜெ.ஜெயநந்தா (விஞ்ஞானம்) (NCOE) |
| திருமதி ச. தேவகுமார | செல்வி இ.துஸ்யந்தினி(விஞ்ஞானம்) (NCOE) |

### புதிதாக நிரந்தரமாக இணைந்த ஆசிரியர்கள் :

- திருமதி நே.டெரின்டகுமார்
- திருமதி லஜீவகன்
- திரு அ. தினேஸ்குமார்
- திரு இ.சிவகுமார்

தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர் - 01

- திரு ஜா.சுகந்தன்
- திருமதி நி.டினேஸ்

தொண்டர் ஆசிரியர்

- திருமதி சு.டலேந்திரன்

ஓய்வு பெற்ற ஆசிரியர்

- திருமதி த.பாஸ்கரன்

## கல்விசாரா ஊழியர்கள்

இப்பாடசாலையில் சிறந்த வகையில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் பாடசாலைப் பணியாளர் திரு கு. செல்வகுமார் அவர்களை மனமகிழ்வோடு அவர்தம் சேவைக்குறுதி பாராட்டுவதோடு மேலும் அவர் இப்பாடசாலைக்கு நேரிய சீரான பணியாற்றி பதவி உயர்வுகள் பெற இறையருள் வேண்டி நிற்கின்றேன். மேலும் இப்பாடசாலையில் காவலாளியாக திரு வைகுநாகேந்திரன் (காவலாளி தரம்-I) அவர்களையும் வரவேற்று தன் பணியை சிறப்பாக மேற்கொள்ள இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

## மனமகிழ்வு தரும் மாணவச் செல்வங்கள்

| மாணவர்கள் | ஆரம்பப்பிரிவு | இடைநிலை | மொத்தமாணவர் |
|---|---|---|---|
| ஆண் | 66 | 144 | 210 |
| பெண் | 58 | 146 | 204 |
| பாடசாலையின் மொத்த மாணவர்கள் | | | 414 |

என் அன்பிற்குரிய மாணவச்செல்வங்களே! உங்கள் வாழ்க்கையின் வசந்த காலமான இந்த மாணவப் பருவத்தினை வீணாக்க முயலாது எங்கள் பாடசாலையின் மகுட வாசகமான **"கல்வியே கருந்தனம்"** என்பதற்கு ஏற்ப கல்விச்செல்வத்தைப் பெற கற்க வேண்டிய அனைத்தையும் கற்று முழுமையான மனிதனாக பரிணமிக்க முயல்வதோடு ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நீதி, நேர்மை, ஆன்மீக ஈடுபாடு போன்ற நற்பண்புகளை கடைப்பிடித்து பாடசாலையின் ஒழுக்க விதிகளை பேணி நடந்து சமூகத்தின்

வளர்ச்சிக்கு உங்களால் ஆன சேவையை ஆற்ற முன் வர வேண்டும். அத்தோடு அன்பிற்குரிய மாணவர்களே! உங்களுக்காக கடமையுட கருமமும் கொண்டு உழைக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுடன் இணைந்து அவர்களை மதித்து எங்கள் பாடசாலையை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்வதே உங்களின் கடமையாகும் என்பதை உணர்ந்து செயற்படுங்கள் என வேண்டுகின்றேன்.

## பெற்றோர்கள்

அன்பான பெற்றோர்களே, காலத்தின் தேவை கருதி பெற்றோர் தின விழாவையும் பரிசளிப்பு விழாவையும் ஒரே தினத்தில் கொண்டாட ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இன்றைய பெற்றோர் தின விழாவிற்கு வருகை தந்திருக்கும் பெற்றோர்கள் அனைவரையும் வரவேற்று பெற்றோர் தின வாழ்த்துக்களையும் கூறி மகிழ்கின்றேன். உங்கள் பிள்ளைகளின் நலன் கருதி நீங்கள் முழுமையான ஒத்துழைப்பை பாடசாலை சமூகத்துடன் இணைந்து வழங்கி உங்களாலான அர்ப்பணிப்புகளினூடாக பாடசாலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். தற்போது நவீன கலாசார மோகங்களால் உங்கள் பிள்ளைகள் திசைமாறி சென்று வளமான எதிர்காலத்தை சீரழிக்காமல் எதிர்கால சிற்பிகளாக மிளிர, எங்களுடன் இணைந்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் மாணவர்களது இணைபாட செயற்பாடுகளுக்கு வெளி இடங்களிற்கு அழைத்துச் செல்வதற்கு எம்மோடு ஒத்துழைப்பு நல்கி வரும் அனைத்துப் பெற்றோர்களுக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் வருடாந்த சிறுவர் சந்தை செயற்பாட்டின் ஊடாக உங்கள் பிள்ளைகளின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க உங்களது நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதனால் பாடசாலை பெருமை கொள்கின்றது. உங்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டி நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் உங்கள் அனைவரது பங்களிப்பையும் நாடி நிற்கின்றேன்.

## பொதுத்தேர்வுகள்

2016 ஆம் ஆண்டு க.பொ.த(சா.த) பரீட்சையில் தோற்றிய 41 மாணவர்களில் உரிய தரத்துடன் 19 மாணவர்கள் சித்தி பெற்று உயர் தரத்தில் கல்வி கற்கின்றனர். இவர்களை பாராட்டுவதோடு மென்மேலும் அவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம். மேலும் 2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 28 மாணவர்கள் தோற்றி 22 மாணவர்கள் 70 ற்கு மேல் புள்ளிகளைப் பெற்றதுடன் 2 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர்.

70 க்கு மேல் புள்ளிகளைப் பெற்று தலைமைச் சான்றிதழ் பெற தகுதி பெற்று 78.5% மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். அனைத்து மாணவர்களையும் பாராட்டுவதோடு அவர்களை திறம்பட வழிப்படுத்தி கற்பித்த அனைத்து ஆசிரியர்களையும் மனதார வாழ்த்துகின்றேன்.

## இணைபாடவிதான செயற்பாடுகள்

மேலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் எமது மாணவர்கள் குடும்ப, கோட்ட, வலய, மாவட்ட, மாகாண,தேசிய மட்டங்களில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். போதிய வளப்பற்றாக்குறையுடன் நாம் இருந்தாலும் இருக்கின்ற வளங்களை உச்சமாக பயன்படுத்தி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சாதனை படைக்கின்றோம். அந்தவகையில் சித்திரப்போட்டியில் மாகாணம் . வரை சாதனை படைத்து வருகின்றனர். ஆரம்பப்பிரிவில் இவ்வருடமும் மாகாணத்தில் செல்வி அவிபூஜா (தரம் 4 ) 2ஆம் இடம், வெளிக்கப்போட்டியில் வலய மட்டத்தில் 1ம் இடம் பெற்று மாகாணமட்டம் வரை சென்றுள்ளார். தரம் 9 ஸ்ரீசசிக்குமார் சிங்கள பேச்சுப் போட்டியில் மாகாணமட்டத்தில் 2ம் இடத்தை பெற்று தேசியம் வரை சென்றுள்ளார். இவை எமக்கு பெருமை சேர்த்துள்ளமையையிட்டு அவர்களையும், அவர்களை வழிப்படுத்தியவர்களையும் பாராட்டி நிற்கின்றோம்.

## விளையாட்டுத்துறை

விளையாட்டுத் துறையிலும் எமது மாணவர்கள் திறமை மிக்கவர்கள் என்பது இவ்வருட கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய போட்டிகள் சான்று பகர்கின்றன.

எமது பாடசாலையில் மாணவர்களுக்கான விளையாட்டு மைதானம் இல்லாதவிடத்திலும் உள்ளக அரங்க செயற்பாட்டினூடாக செயற்திறனை ஏற்படுத்தும் முகமாக 2011ஆம் ஆண்டில் மேசைப்பந்தாட்டம், கரம், சதுரங்கம் போன்ற விளையாட்டுக்களை ஆரம்பித்து 2014,2015,2016,2017 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக மேசைப்பந்தாட்ட அணியில் ஆண்,பெண் இருபாலாரும் தேசிய மட்டம் வரை சென்று பங்குபற்றி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும். அத்தோடு கரம், சதுரங்கப்போட்டிகளில் மாகாணமட்டம் வரை சாதனை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் எம் மாணவர்களை விளையாட்டுத்துறைச் செயற்பாடுகளில் பங்குபற்ற வழிப்படுத்தி இம்மாணவர்களின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்கி சாதனை படைக்க வைத்த

ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் வாழ்த்துவதோடு சகல விதத்திலும் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி ஊக்குவிக்கும் அனைத்து உள்ளங்களிற்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

## பௌதிக வளம்

எமது பாடசாலையிலுள்ள மாணவர் தொகைக்கு ஏற்ப பொருத்தமான கட்டடவசதிகளோ, இடவசதிகளோ அற்ற நிலையில் இப்பாடசாலை இயங்கி வருகிறது. மிகவும் குறுகிய நிலப்பரப்பில் அமைந்துள்ள கட்டடங்களை மட்டும் கொண்ட மிக இடநெருக்கடிக்குள் எமது கற்றல் கற்பித்தல் நடைபெறுகிறது. உரிய போதிய வளங்கள் இன்மை கற்றலுக்குத் தடையாக இருந்த போதிலும் பல சிரமங்களின் மத்தியிலும் ஆசிரியர்கள் அடைவுமட்டத்தை உயர்த்தி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். எமது மாணவர்கள் அன்றாடக் காலைப்பிரார்த்தனை, உடற்பயிற்சியை மேற்கொள்வதற்கு எம் பாடசாலையுடன் இணைந்துள்ள குறுகிய நிலப்பரப்பான தேவாலய நிலமும் துணைபுரிகின்றது.

## இயங்கு நிலை செயற்பாடுகள்(மன்றங்கள், கழகங்கள்)

இப் பாடசாலையின் பாட மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்கு முகங்கொடுத்துச் செல்வதற்காக இணைபாடச் செயற்பாட்டு மன்றங்களும், ஆசிரியர் நலன் பேண ஆசிரியர் நலன்புரிக்கழகமும் இயங்குகின்றன. அத்துடன் ஒழுக்காற்றுக்குழு,விளையாட்டுக் குழு, பரீட்சைக்குழு,அனர்த்த முகாமைத்துவக்குழு, பரிசளிப்புவிழாக்குழு, கட்டாயக்கல்விக்குழு, உணவு வழங்கல்திட்டக்குழு, பெண் சாரணியக் குழு, மாணவத்தலைவர் குழு, சுகாதாரக் குழு, சுற்றாடல் முன்னணி படையணி, சிறுவர் சுற்றாடல் கழகம், பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்தி செயற்பாட்டுக் குழு போன்ற பல்வேறு குழுக்கள் ஊடாகவும் மேலும் மாணவர் நலனோம்பல்,மன்றச்செயற்பாடுகள், ஆன்மீகச்செயற்பாடுகள், நூலகச்செயற்பாடுகள், விசேட தேவையுடைய மாணவர்களுக்கான செயற்பாடுகளின் ஊடாகவும் அபிவிருத்தி மேம்பாட்டிற்கு ஒத்துழைக்கும் ஒவ்வொரு குழுவினரும், ஒவ்வொரு குழுவையும் பொறுப்பேற்று நடத்தும் பொறுப்பாசிரியர்களும், அவர்களுடன் இணைந்து செயற்படும்ஏனைய ஆசிரியர்களும் தங்கள் கடமைகளை செவ்வனே செய்து மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்தவும், அவர்களை வழிப்படுத்தவும் உதவி வருகின்றமை பாராட்டுதற்குரியது.

**SDC, SMT SDS,**

எமது பாடசாலையின் அபிவிருத்தியில் சிறப்பாக பங்காற்றி வரும் பாடசாலை மேம்பாட்டு அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பாடசாலை முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள், கொள்வனவுக்குழு, மதிப்பீட்டுக்குழு, தொழிநுட்பக்குழு உறுப்பினர்கள் மேலும் பழைய மாணவர்கள், அன்பான அனைத்து பெற்றோர்கள், நலன் விரும்பிகள், அனைத்து பயனாளிகளுக்கும் தாங்கள் வழங்கி வரும் ஒத்துழைப்பிற்கு இந்நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக நிர்வாகம்,உள்ளக மேற்பார்வைக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் உதவி அதிபர் திருமதி சு.சுரேஸ், அதிபர் பகுதி தலைவர்கள் திரு ஜூ. ஜொர்ஜ், திருமதி அ.சிவானந்தம், திருமதி ஜெ.சிவானந்தன் ஆகியோருக்கும் ஏனைய கழகச்செயற்பாடுகளுக்கு முன்னின்று உழைத்து வரும் சகல ஆசிரியர்களுக்கும், மற்றும் சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கி வரும் அனைத்து ஆசிரியர்களுக்கும் அவர்களின் பணி கருதி நன்றி தெரிவிக்கின்றேன்.

நிறைவுரை.

எங்கள் பாடசாலையின் வளர்ச்சியில் பல வகையிலும் பங்காற்றி வரும் வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளருக்கும், கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் அவர்களின் சேவையை நினைத்து உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எமது பாடசாலையின் சகல வளர்ச்சிப்படிகளிலும் உறுதுணையாக நின்று ஒத்துழைப்பு நல்கி வரும் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி திரு ச. சிவானந்தராஜா அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு கோட்டக்கல்வி பணிமனையில் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரும் எமது பாடசாலைக்கு ஆற்றும் சேவைகளை நினைந்து அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் பரிசில் தின்விழாவை சிறப்பிக்க தங்கள் உதவியை வழங்கிய மானிப்பாய் இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்கள், வங்கியாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்வதோடு நினைவுப்பரிசில் வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன்.

அத்துடன் தாங்களாகவே முன்வந்து பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவிகளை வழங்கிய, வழங்கவுள்ள பெற்றோர்களுக்கும், வறுமைக்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிய றோஸ் வேஹினி சபைக்கும், பழைய மாணவர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். பரிசில் தினத்திற்கு சகலவிதத்திலும் உதவிகள் வழங்கிய அனைவருக்கும் உளங்கனிந்த நன்றிகளை தெரிவிப்பதோடு மீண்டும், எங்கள் அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் அனைத்து அன்பர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி

<u>2017 பாடசாலை வளர்ச்சியில் பங்களிப்புச் செய்தோர் விபரமும் திணைக்களங்களினால் கிடைத்த நிதி விபரங்களும்</u>

- பெற்றோர் சந்தா ரூ.11,000.00
- பெற்றோர் அன்பளிப்பு ரூ93,400.00
- தரஉள்ளீடு ரூ121,520.28
- ஆசிரியர் மாணவர் உபாயட்ட செயற்பாடு ரூ29,244.62
- NSBS Payment ரூ661,200.00

நினைவுப் பரிசில்கள் வழங்கியோர்

- அமரர் முருகைப்பிள்ளை (முன்னாள் அதிபர்) ஞாபகார்த்தமாக வழங்கிய நிலையான வைப்பு நிதிக்கான வட்டி ரூ.5000.00
- அமரர் அழகிரிகாந்தா (முன்னாள் அதிபர்) ஞாபகார்த்தமாக வழங்குபவர் திருமதி ச.ஸ்ரீகாந்தா ரூ.5,000.00
- அமரர் நா.பராசக்தி ஞாபகார்த்தமாக வழங்குபவர் மகன் திரு நா.தெய்வேந்திரன் ரூ. 5000.00
- அமரர் திரு வ.சிங்கராசா ஞாபகார்த்தமாக வழங்குபவர் திரு.சி.துமிசன் ரூ2,000.00
- அமரர் திரு.திரு ஞானசம்பந்தர் சிவநாதன் ஞாபகார்த்தமாக வழங்குபவர் திருமதி.சி.இளம்பிறையன் ரூ1,000.00
- அமரர் செ.சிவநேசன் ஞாபகார்த்தமாக வழங்குபவர் திருமதி.ந.சந்திரகுமார் ரூ1,000.00
- அமரர் போ.போன் சிங்கம் ஞாபகார்த்தமாக வழங்குபவர் திருமதி. இராசமலர் ரூ1,000.00

- அமரர் S.A எட்வேட் ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திருமதி மகேஸ்வரி எட்வேட் ரூ1,000.00
- அமரர் திரு திருமதி செல்வநாதன் திரேசம்மா ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் செல்வி வேடினப்பலதா ரூ1,000.00
- அமரர் திரு யவைகுந்தன் ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திருமதி வைகுதர்சினி ரூ1,000.00
- அமரர் நடபத்மநாதன் ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திருமதி.ச.சதீசன் ரூ500.00
- அமரர் தங்கம்மா நாகரத்தினம் ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திருமதி.த.சத்தியதாசன் ரூ500.00
- அமரர் மரியநாயகம் ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திருமதி பூ.மேரிடயானா ரூ500.00
- அமரர்கள் திரு.திருமதி ஞானமுத்து கிறிஸ்ரினம்மா ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திரு ஞா.லொர்வே ரூ500.00
- அமரர் திருமதி அமரியபிலோமினா ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திரு அதிலேஸ்குமார் ரூ1000.00
- அமரர் திரு திருமதி தியாகராசா அன்னம்மா ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திரு தா.சுகந்தன் ரூ1000.00
- அமரர் திருமதி அகணமலர் ஞாபகார்த்தமாக
  வழங்குபவர் திருமதி பகுதர்சினி ரூ1000.00
- அமரர் சா.சரஸ்வதி ஞாபகார்த்தமாக வழங்குபவர்
  திருமதி ச.ஜெயந்திக்குமார் ரூ500.00

## அன்பளிப்பு வழங்கியோர்

| | |
|---|---|
| BOC மானிப்பாய் | ரூ 5000.00 |
| NSB மானிப்பாய் | ரூ 2000.00 |
| செல்வி மு.சுகன்ஜா | ரூ 1000.00 |
| திருமதி நே.பேரின்பகுமார் | ரூ 1000.00 |
| திரு க. சத்தியசீலன் | ரூ 500.00 |
| திருமதி தி.தவரானா | ரூ 500.00 |
| திருமதி ச.ஜெயந்திக்குமார் | ரூ 500.00 |

பரிசில் பெறும் மாணவர் விபரம்

| இல | பாடத்திட்டமான பரிசில் பெறுவோர் | இலைமறை விதானம் பெற்றவர் | இலைமறை நூல், பொது சொத்துக்களை முறையாக பேணல் | நல்லொழுக்கமுள்ள மாணவர் | வரவு ஒழுங்கு மாணவர் |
|---|---|---|---|---|---|
| 1 | பி. பிரசன்னா | பி. பிரசன்னா | பி. பிரதீபா | ரா. துலோக்சிகா | பு.சரண்ராஜ் |
| 2 | செ. ஜெஸிரோம | தே. தர்சாயினி | சி.மதுஷாந்தி | அ. பிரவீன | க.அனுஷாசன |
| 3 | கி. கஜூரான் | கி. கஜூரான் | ந. நிஷா | கோ. யோபிகா | பு. ஜீவராஜ் |
| 4 | ஜி. கடாஜூஜா | அ. விபூஜா | தி. பிரதீபா | வி. ஜேரிமெரின்ஜெயா | செ. டொறிகா |
| 5 | சி. அஜிதா | பே. ஜெராமதாஸ் | க. நிருபாஜனா | ந. ரதீஸ் | ஜெ. வித்துஜா |
| 6 | க. கவிசீலன் | ர. நிர்மலஜனா | கு. புவனகயூபா | வி. விதுர்ஜனா | ரெ. நிறுஜா |
| 7 | ஜெ. ஜெனிலெரோமா | ஐ. பிரவீன் | பே. ரேபாசிகா | செ. காவியா | ம.சங்கயுகா |
| 8 | கி. கிலஜானா | ந. விதுர்சிகா | ஜெ.மலைணறூஜா | சி. சுபிசனா | ஜெ.ஜெதுஜா |
| 9 | ஜெ. ஜெனிபா | ஸ்ரீ.சச்சிகயா | வ.வித்தேகந்தினி | ச.பூருத்திகா | ம.சுஜீபன் |
| 10 | ஜெ. ஜெனிசியா | ஜி. சர்துஜா | கி. கிலஜானா | ம. ஆண்டோனலபிரியா | நி. தேசிகா |
| 11 | ச. மரியவதுஜா | ச. அபினாதிகா | பி. விரதுரா | ம.ரதிஜோஜுகன் | ஸ்ரீசாலினிதா |

## தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் தகமை பெற்றோர் - 2017

| | | | |
|---|---|---|---|
| 01 | சி.அர்ஷயா<br>(வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி பெற்றோர்) | 12 | ற.சாலினி |
| 02 | உ.தர்மிகா<br>(வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி பெற்றோர்) | 13 | வி.திபிஷன் |
| 03 | ற.றதீஸ் | 14 | கி.கிஷாந்தினி |
| 04 | யே.றொஷான் | 15 | சு.கௌசிகன் |
| 05 | அ.கோபிகா | 16 | ஜெ.விதுசா |
| 06 | க.நிதுஷனா | 17 | பி.பத்மலோஜினி |
| 07 | சி.மகிழ்றன் | 18 | க.லக்சுமி |
| 08 | டே.ஜெராட் | 19 | ஜெ.திலக்சன் |
| 09 | த.கயல்வர்ணன் | 20 | சி.சிஜான்யா |
| 10 | நா.டனுஷன் | 21 | க.ரவிராஜ் |
| 11 | ஜெ.ஜெனிஸ்ரலா | 22 | ப.கீர்த்திகா |

| | தரம் - 11 2016 இல் சித்தியடைந்து க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றோர் விபரம் | |
|---|---|---|
| 1 | மு.டன்சியா | 7A B S |
| 2 | செ.ஹரிப்பிரகாஸ் | 6A 2C S |
| 3 | க.சாமினி | 2A 4B C S |
| 4 | ஜெடிலெக்சி | 2A 2B 4C S |
| 5 | அமேரிசாளினி | A 6B 2C |
| 6 | க.பிரசாந்தினி | 2A 2B C 3S |
| 7 | ந.கம்சிகா | 2A B C 4S |
| 8 | இடிஷாயினி | 2A 2C 5S |
| 9 | வி.சோனியா | 2A 2C 4S |
| 10 | ஜெ.ஜென்சிகா | A 2B 4S |
| 11 | க.துதிஸ்ரியா | A B 4C 2S |
| 12 | இ.துஸ்யந்தன் | A B 2C 4S |
| 13 | ஆ.துர்க்கா | A B C 5S |
| 14 | கு.ஜென்சிகா | A B 2C 4S |
| 15 | அ.டிசானுஜா | A 4C 3S |
| 16 | பு.றெம்சிகா | A 2C 4S |
| 17 | சி.சிந்துஜா | 2B 3C 2S |
| 18 | லோ.தீபிகா | 2B 2C 4S |
| 19 | ஞா.சோபிதா | B 2C 5S |
| 20 | இராஜிந்தினி | 2A B 2C 2S |
| 21 | மா.கீர்த்திகா | A B 2C 3S |
| 22 | ர.நிதர்சனா | 5C S |
| 23 | ப.மதுரா | 4C 4S |
| 24 | ச.கோபிகா | 3C 5S |

# இணை பாடவிதான செயற்பாடுகள் - 2016

| மாணவர் பெயர் | தரம் | நிகழ்ச்சி | இல்ல மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| சா.சஸ்மிகா | 1 | சித்திரப் போட்டி | 2 | | | |
| கி.சியான் | 2 | சித்திரப் போட்டி | 2 | | | |
| அவிபூஜா | 3 | சித்திரப் போட்டி | 1 | | | |
| சி.அக்ஸயா | 4 | சித்திரப் போட்டி | 1 | | | |
| றரிக்ஷனா | 5 | சித்திரப் போட்டி | 1 | 1 | 2 | * |
| அவிபூஜா | 3 | துரித கணிதம் | 1 | | | |
| ஜி.சுபானுஜா | 3 | துரித கணிதம் | 2 | | | |
| வி.மேரிமெரின்ரெலா | 3 | துரித கணிதம் | 5 | | | |
| றுறதீஸ் | 4 | துரித கணிதம் | 3 | | | |
| க.சுப்சிகன் | 5 | துரித கணிதம் | 5 | | | |
| ஜெ.றொசான் | 4 | பாவோதல் | | 3 | | |
| த.சுபிஷனா | 7 | பாவோதல் | | 3 | | |
| தவிதுர்சிகா | 7 | தனி இசை | | 3 | | |
| ஜெ.ஜெனிடா | 8 | பாவோதல் | | 2 | | |
| ஜெ.ஜெஸ்ரிகா | 9 | பேச்சு | | 1 | | |
| இ.றொக்ஷனா | 9 | தனி இசை | | 3 | | |
| ஆ.சுபாஜினி | 11 | தனி இசை | | 1 | | |
| அ.மேரிசாளினி | 11 | கவிதை | | 3 | | |
| கி.சுபான் | 2 | சதுரங்கம் | | 2 | | |
| லை.ஜெறோம் | 1 | சதுரங்கம் | | 1 | 2 | * |
| இ.வதுசன் | 1 | சதுரங்கம் | | 2 | | |
| ஞா.நபிலன் | 1 | சதுரங்கம் | | 6 | | |
| க.ஜெதுர்சான் | 1 | சதுரங்கம் | | 7 | | |
| ஜெ.அபிஸா | 1 | சதுரங்கம் | | 8 | 4 | |
| லை.ஜெறோன் | 1 | சதுரங்கம் | | 3 | 4 | |
| லை.டொரின் | 3 | சதுரங்கம் | | 1 | 1 | |
| அவிபூஜா | 3 | சதுரங்கம் | | 6 | | |
| வி.சுபானுஜா | 3 | சதுரங்கம் | | 3 | | |
| வி.மேரிமெரின்ரலா | 3 | சதுரங்கம் | | 4 | | |
| றுறதீஸ் | 4 | சதுரங்கம் | | 5 | | |
| அகோபிகா | 4 | சதுரங்கம் | | 7 | | |

| மாணவர் பெயர் | வயது | நிகழ்ச்சி | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|---|
| ஜி.சுபாஜனா | 6வ.கீ | முதலமைச்சர் கிண்ண சதுரங்க சுற்றுப்போட்டி | 1 | ✓ | |
| கி.கஜன் | | | 1 | 3 | |
| உ.ஜீவராஜ் | | | 4 | 10 | |
| வி.திபீசன் | | | 5 | ✓ | |
| ஜெ.ஜொசான் | | | 9 | ✓ | |
| ர.ரதீஸ் | | | 10 | ✓ | |
| சட.ஜீபன் | 15வ.கீ | மேசைப்பந்தாட்டம் | | 1 | 2 |
| கே.சரத்குமார் | | | | | |
| செ.றொட்சன் | | | | | |
| பா.அருண் | | | | | |
| ஜெ.ஜெனிசியா | | | | 1 | |
| நி.தேசிகா | | | | | |
| இ.வைஸ்ணவி | | | | | |
| நி.நிரோஜன் | 19வ.கீ | | | 1 | 1 |
| ஜெ.ஜெசிகரன் | | | | | |
| வி.துஸ்யந்தன் | | | | | |
| செ.ஹரிப்பிரகாஸ் | | | | | |
| ச.அனோஜிகா | | | | 1 | 3 |
| ஜெ.சகன்ஜா | | | | | |
| ஜெ.ஜெஸ்சிகா | | | | | |
| பி.பிரியங்கா | | | | | |
| ந.கம்சிகா | | | | | |
| நி.நிரேஜன் | 19வ.கீ | கரம் | | 1 | |
| றொ.ஜேம்ஸ் | | | | | |
| த.தனுசன் | | | | | |
| க.பிறின்சிகன் | | | | | |
| வி.டிலெக்ஷி | | | | 1 | |
| அ.மேரிசாளினி | | | | | |
| க.சாமினி | | | | | |
| ச.சிந்துஜா | | | | | |

## க.பொ.த (சா/த) பகுப்பாய்வு -2016

| பாடம் | SIT | A | B | C | S | W |
|---|---|---|---|---|---|---|
| இந்து சமயம் | 33 | 16 | 5 | 9 | 3 | - |
| றோ.க | 7 | 4 | 2 | 1 | - | - |
| தமிழ் | 40 | 1 | 6 | 10 | 15 | 8 |
| கணிதம் | 41 | 2 | 2 | 1 | 14 | 22 |
| விஞ்ஞானம் | 40 | 1 | 1 | 3 | 19 | 16 |
| ஆங்கிலம் | 41 | - | 1 | - | 4 | 36 |
| வரலாறு | 40 | 3 | 3 | 5 | 18 | 11 |
| வர்த்தகம் | 11 | 2 | - | 3 | 5 | 1 |
| குடியுரிமை | 30 | - | - | 2 | 10 | 18 |
| சித்திரம் | 13 | - | 1 | 4 | 8 | - |
| நடனம் | 17 | 6 | 7 | 3 | 1 | - |
| சங்கீதம் | 9 | 2 | 2 | 3 | 2 | - |
| மனைப்பொருளியல் | 22 | - | 2 | 11 | 3 | 6 |
| சுகாதாரம் | 18 | 2 | 2 | 10 | 3 | 1 |

| பாடங்கள் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| சைவநெறி | 96.77% | 97% | 100% | 97.20% | 88% | 92% | 100% |
| றோ.க | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% |
| தமிழ் | 83.71% | 93% | 81% | 76% | 74% | 84% | 80% |
| ஆங்கிலம் | 2.38% | 12% | 2.70% | 8% | 12% | 13% | 15% |
| கணிதம் | 45.24% | 31% | 22% | 49% | 44% | 46% | 46% |
| வரலாறு | 54.76% | 38% | 49% | 51% | 62% | 60% | 73% |
| விஞ்ஞானம் | 47.62% | 40% | 41% | 57% | 38% | 44% | 60% |
| சித்திரம் | 100% | 100% | 92.30% | 87% | 63% | 83% | 100% |
| சங்கீதம் | 100% | 66% | 90% | 91% | 100% | 84% | 100% |
| நடனம் | 82.35% | 100% | 100% | 82% | 85% | 94% | 100% |
| புவியியல் | | 80% | 82.60% | 93% | - | - | - |
| இலக்கிய நயம் | - | - | - | - | - | - | - |
| குடியுரிமை | | 47% | 85.70% | 75% | 87% | 83% | 40% |
| வணிகம் | 82.30% | 80% | - | 82% | 73% | 79% | 91% |
| முயற்சியாண்மை | 52.94% | - | - | - | - | - | - |
| விவசாயம் | 80% | - | 50% | - | - | - | - |
| மனைப்பொருளியல் | 100% | 75% | 81.80% | 88% | 70% | 59% | 73% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 84.61% | 83% | 84.60% | 82% | 94% | 86% | 94% |
| கடல்வளம் | 100% | | | 80% | - | - | - |
| த.தொழிநுட்பம் | | 55% | | 88% | - | - | - |
| க.பொ.த உயர்தர தகுதி பெற்றோர் | 16 | 19 | 5 | 19 | 13 | 25 | 21 |
| க.பொ.த உயர்தர தகுதி பெற்றோர் சதவீதம் | 35% | 41% | 14% | 49% | 38% | 45% | 51.2% |

| தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| தோற்றியோர் | 30 | 33 | 35 | 36 | 34 | 29 | 28 |
| சித்தியடைந்தோர் | - | - | 2 | - | - | 1 | 2 |
| வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி அடைந்த வீதம் | - | - | 5.5% | - | - | 3.5% | 7.1% |
| 70 ற்கு மேல் புள்ளி பெற்றோர் | 21 | 21 | 21 | 25 | 24 | 27 | 22 |
| சித்தியடைந்த வீதம் | 70% | 64% | 60% | 69% | 71% | 93% | 78.5% |

## ஆசிரியர்களில் விசேட பரிசு பெறுவோர்

- திரு ஞா.ஜோர்வே (சிறந்த நேர முகாமைத்துவம்)
- செல்வி பூ.சுகன்ஜா (2016 குறைந்த லீவு பெற்ற ஆசிரியர்)
- திருமதி க.இராஜகன் (புலமைப் பரிசில் பரீட்சைக்கு சிறந்த வழிகாட்டல்)
- திருமதி பே. கிருஷ்ணகுமார் (சிறந்த emis தரவேற்றம்)

## கல்வி சாரா ஊழியர்கள்

- திரு ஆ.செல்வகுமார் (சிறந்த முறையில் கடமையை நிறைவேற்றல்)

திரு வை.ஞானச்சந்திரன் (சிறந்த முறையில் கடமையை நிறைவேற்றல்)

| அதிபர் ஆசிரியர்கள் விபரம் | | |
|---|---|---|
| 1 | திருமதி. ந. சந்திரகுமார் | Principal,BEd,Maths |
| 2 | திருமதி ச.சுரேஸ் | Dupty Principal SLTS 2-I BCom. Dip in .Edu |
| 3 | திரு.க.சத்தியசீலன் | SLTS I Maths Trd .B.A.Dip.in.Edu |
| 4 | திருமதி.த. சத்தியதாசன் | SLTS I Maths &Science Trd. BEd |
| 5 | செல்வி. க. முருகேக | SLTS 2-I B.F.A Dip in Edu |
| 6 | திருமதி.ஜெ.சிவானந்தன் | SLTS 2-I Tamil Trd |
| 7 | திருமதி. சி.கிருஷ்ணானந்தா | SLTS 2-II Science Trd |
| 8 | திருமதி. பே. கிருஸ்ணகுமார் | SLTS 2-II Dip.in.Teach Maths B.A Dip.in.Edu |
| 9 | திரு. கு. சொர்வே | SLTS 2-II Primary Trd . BEd |
| 10 | திருமதி. சி. சதீசன் | SLTS 2-II B.F.A Dip.in.Edu |
| 11 | திரு. நா.திலகராஜ் | SLTS 2- II PT Trd B.A |
| 12 | திருமதி. க. அதிசயராஜா | SLTS 2-II B.A Dip in .Edu |
| 13 | திருமதி.ச. ஜெயந்திகுமார் | SLTS 2-I Home Eco Trd |
| 14 | திருமதி கௌ. கணேசகுமார் | SLTS 2- I Hindusium Trd |
| 15 | திருமதி.க.ராகவன் | SLTS 2-II B.A Dip in .Edu |
| 16 | திருமதி.ந.நிலேகீதன் | SLTS 2-II B.F.A Dip in .Edu |
| 17 | திருமதி.அ.சிவானந்தம் | SLTS 2-I B.A Dip in .Edu |
| 18 | திருமதி த.தவராசா | SLTS 2-I Maths Trd |
| 19 | திருமதி ரா.கமலகுமார் | SLTS 2-I Primary Trd |
| 20 | திருமதி க.யோகரட்ணம் | SLTS 2-II Primary Trd |
| 21 | திருமதி க.பற்றிக் | SLTS 2-I Fisheries & Food .Tech |
| 22 | திரு சி.துமிசன் | SLTS 3-I Dip.in.Teach Sci |
| 23 | திருமதி மே.யூட்அன்ரன் கிருபானந்தராஜா | SLTS 3-I Dip.in.Teach So.Sci |
| 24 | திரு அ.தினேஸ்குமார் | SLTS 2-II B.A Dip in .Edu |
| 25 | திருமதி ல.ஜீவகன் | SLTS 2-II B.B.M Dip in .Edu |
| 26 | திருமதி நே.பேரின்பகுமார் | SLTS 2-II B.A Dip in .Edu |
| 27 | திரு இ.சிவகுமார் | SLTS 3-I Eng Trd |

## Vision (தூர நோக்கு)

மனித நேயமும், சூழலுடன் ஒன்றித்த வாழ்வும், ஆன்மீக நெறிவழுவாமையும் உடைய நற்பிரஜைகளைக் கொண்ட சமூக உருவாக்கம்.

## Mission (பணிக்கூற்று)

மனித நேயத்தினூடாக ஆன்மீக நெறிகளையும், நவீன தொழில்நுட்ப சக்திகளையும் பயன்படுத்தி மாறிவரும் சமூக சவால்களையும் எதிர்கொள்ளக் கூடிய சூழலுக்கு இசைவான நடத்தை மாற்றத்தை அனைவரது உச்சப் பங்களிப்புடன் உருவாக்கிக் கொள்ளல்.

Thank You